SLAB
SRI LANKA ACCREDITATION BOARD

# இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை

## வர்த்தக, வாணிப உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

# வெற்றிடங்கள்

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை (SLAB) இன் பின்வரும் பதவிகளுக்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை (SLAB) என்பது 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கைக்கான தேசிய அங்கீகார அதிகார சபையாகும். மேலும் இது ஆய்வுகள் / அளவுத்திருத்த ஆய்வகங்கள், மருத்துவ ஆய்வகங்கள், (ஆய்வு நிறுவனங்கள் மற்றும் அவற்றின் சான்றிதழ்களை சரிபார்த்தல் மற்றும் துல்லியத்தன்மை) என்பவற்றிற்கு பொறுப்பானதாகும். வர்த்தக அமைச்சின் கீழ் தற்போது செயல்படுவதுடன், SLAB ஆல் இயக்கப்படும் அங்கீகார திட்டங்களுக்காக SLAB IAF MLA மற்றும் ILAC MRA ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**விண்ணப்பதாரர்களுக்கான பொதுவான தகவல்கள் :**

- விண்ணப்பங்கள் எமது நியமிக்கப்பட்ட படிவத்தைப் பயன்படுத்தி சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதை நினைவில் கொள்க, இதை எமது வலைத்தளமான **www.slab.lk** இலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

  மேலதிகமாக, தேவையான **அடிப்படைத் தகுதிகளை** நிரூபிக்கும் அனைத்து ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் பின்வரும் முகவரிக்கு **பதிவு செய்யப்பட்ட தபால் மூலம்** மட்டுமே அனுப்பப்படல் வேண்டும்.

  தலைவர்,
  இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை,
  இல. 44, விசேட பொருளாதார நிலையம், நாரஹேன்பிட்ட, கொழும்பு 05.

- விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி நிலையினை தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.
- ஏனைய கொடுப்பனவுகள் உள்ளடங்களாக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
  - தொழில் வழங்குனரால் 15% ஊழியர் சேமலாப நிதியம் (EPF) பங்களிப்பு செய்யப்படும்
  - தொழிலாளரினால் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் (ETF) பங்களிப்பு செய்யப்படும்
  - அக்ரஹாரா மருத்துவ காப்பீட்டுக்கு தகுதியுடையவர்களாவர்
- **பயணச் செலவுகள் திருப்பித் தரப்படாது** என்பதை நினைவில் கொள்ளவும்.
- கடைசி திகதிக்குப் பின்னர் கிடைக்கபெறும் மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- விண்ணப்பங்களுக்கான கடைசி திகதி: 2025.09.15

## பணிப்பாளர் - 01 பதவி வெற்றிடம்

**1. தகைமைகள் :**

**1.1 வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

**தொழில்முறை**

1. விஞ்ஞான பாடப்பிரிவில் பட்டம் மற்றும் குறிப்பிட்ட துறையில் (முதுகலை) பட்டம்

   அல்லது

2. மருத்துவ இரசாயன கூடங்கள் தொடர்பாக அல்லது மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான ஆரம்ப பட்டம் மற்றும் குறிப்பிட்ட துறையில் முதுகலை பட்டத்தினை (முதுகலை) பெற்றிருத்தல்.

   அல்லது

3. பொறியியல் விஞ்ஞானத்தில் பட்டம் அல்லது அதற்கொப்பான பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிற்தகைமை மற்றும் குறிப்பிட்ட துறையில் முதுகலை பட்டம் (முதுகலை) பெற்றிருத்தல்.

**அனுபவம் :**

05 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ பதவியொன்றில் அனுபவம் மற்றும் 10 வருட காலப்பகுதியினுள் மதிப்பீடு, தராதர மதிப்பீடு மற்றும் முகாமைத்துவ கட்டமைப்பு கணக்காய்வு தொடர்பான சேவை அனுபம் உட்பட 20 வருட முகாமைத்துவ துறையில் தகுதியான அனுபவம்.

மற்றும்

தராதர மதிப்பீடு மற்றும் சர்வதேச தரங்கள் தொடர்பான அறிவு, பல்வேறு நிபுணத்துவங்களுடன் கூடிய அணிக்காக தலைமைத்துவத்தினை வழங்கி மனிதவளம் மற்றும் நிறுவன வள முகாமைத்துவத்தில் சிறந்த அனுபவத்துடன் முன்னணி மதிப்பீட்டாளராக (Lead Assessor) செயற்பட்டிருத்தல்.

**1.2 உள்ளக விண்ணப்பதாரர்கள்**

**அனுபவம் :**

இலங்கை தராதர அங்கீகாரச் சபையில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடம் மேலதிக பணிப்பாளராக சேவை புரிந்த தகுதியினை கொண்டிருத்தல் வேண்டும்.

மற்றும்

பல ஒழுங்குமுறை அணிகள் மற்றும் முகாமைத்துவம் மற்றும் அனுபவம் மற்றும் மனிதவள மற்றும் பிற வளங்களை நிறுவுதல் ஆகியவற்றின் வழிநடத்துதலுக்கும் நேரடி சர்வதேச தரநிலைகள் மற்றும் நிரூபிக்கப்பட்ட திறன்களை நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

**2. சம்பளம்**

**சம்பளம் மற்றும் மாதாந்த சம்பள அளவு : HM - 2-3– 2025 – LKR 173,000– 4850 x 12 = 231,200**

இருப்பினும், 2027-01-01 வரை அனைத்து ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகளுக்கான ஊதியங்கள் எம்.எஸ்.டி சுற்றறிக்கை எண். 01/2025 இன் அட்டவணை II இன் படி இருக்க வேண்டும்.

**3. வயதெல்லை :**

40 வயதிற்கு குறையாதவாரும் 55 வயதிற்கு மேற்படாதவாரும் இருத்தல் வேண்டும். உயர் வயது எல்லை உள்ளக விண்ணப்பத்தாரர்களுக்கு கிடையாது.

**4. உறுதிப்படுத்தல் :**

இந்தப் பிரிவில் நியமிக்கப்படும் வெளிவாரி விண்ணப்பதாரிகள் மூன்று ஆண்டுகள் தகுதிகாண் காலத்தில் இருப்பார். இந்தக் காலகட்டத்தின் முடிவில் அவரது செயல்திறன் மற்றும் நன்நடத்தை திருப்திகரமாக இருந்தால் அவர்/அவள் நிரந்தர பணியில் அமர்த்தப்படுவார்கள். உள்ளக விண்ணப்பதாரிகள் ஒரு வருட செயல்திறன் காலத்திற்கு உட்படுத்தப்படுவார்கள்.

**5. ஆட்சேர்ப்பு நடைமுறை :**

பொது விளம்பரம் அல்லது பத்திரிகை விளம்பரம் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அதைத் தொடர்ந்து கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும். நேர்முகத் தேர்வின் தகுதி வரிசையில் மட்டுமே நியமனங்கள் செய்யப்படும்.

## நிர்வாக உத்தியோகத்தர் – வெற்றிடம் 01

**1. தகைமைகள் :**

**1.1 வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகாரம் பெற்ற மனித வள முகாமைத்துவம் / பொது நிர்வாகம் / பொது முகாமைத்துவம் / வணிக நிர்வாகம் / முகாமைத்துவம் / வர்த்தகத்தில் பட்டம் பெற்றிருத்தல்.

**1.2 உள்ளக விண்ணப்பதாரர்கள்**

1. மேலே உள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவையான அனைத்து தகுதிகளையையும் பெற்றிருத்தல்.

   அல்லது

2. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பவியல் அல்லாத (MA 1-2) தரம் II இல், பதவிக்கு தொடர்புடைய பிரிவில் ஒரு பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை நிறைவு செய்திருத்தல்.

**2. சம்பளம்**

**சம்பள குறியீடு மற்றும் மாத சம்பள அளவு: JM 1-1 – 2025 – LKR 72,650 – 1360 x 10 – 2040 x 18 = 122,970**

இருப்பினும், 2027-01-01 வரை அனைத்து ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகளுக்கான ஊதியங்கள் எம்.எஸ்.டி சுற்றறிக்கை எண். 01/2025 இன் அட்டவணை II இன் படி இருக்க வேண்டும்.

**3. வயதெல்லை :**

விண்ணப்பதாரர்கள் 22 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு அதிகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். உயர் வயதெல்லை உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு கிடையாது.

**4. உறுதிப்படுத்தல் :**

இந்த வகையின் தரம் II இல் நியமிக்கப்பட்ட ஒரு வெளிவாரி விண்ணப்பதாரர் கடமைகளை ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று வருட காலத்திற்கு தகுதிகாண் காலத்தில் செயற்பட்டுக்கொண்டு இருப்பார். தகுதிகாண் காலத்தில் அவரது செயல்திறன் மற்றும் நடத்தை திருப்திகரமாக இருந்தால், மற்றும் முதலாவது செயல்திறன் தேர்வு முடிந்ததும் அவர் தகுதிகாண் காலத்தின் முடிவில் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார். SLAB இல் ஒரு பதவியில் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்ட உள்ளக விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு வருட செயற்பாட்டு காலத்திற்கு உட்படுத்தப்படுவார்கள்.

**5. ஆட்சேர்ப்பு நடைமுறை :**

எழுத்து மூலத்தேர்வு / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வின் மூலம்

## தொழில்நுட்ப அலுவலர் (IT) - பதவி 01

**1. தகைமைகள் : (1 அல்லது 2 அல்லது 3 கீழ்)**

**1.1 வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

1. பல்கலைகழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் கீழ் தகவல் தொழில்நுட்பத்தில் இளமானி பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/தொழில் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வித் NVQ தரநிலை 6 ஐ விட குறையாத நிபுணத்துவ சான்றிதழை பெற்றிருத்தல்.

   மற்றும்

   தகைமையினை பெற்ற பின்னர் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / வாரியம் அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனம் ஒன்றில் தகவல் தொழிநுட்ப துறையில் (IT) குறைந்த பட்சம் ஐந்து வருட (05) அனுபவத்தை பெற்ற தகுதியினை கொண்டிருக்க வேண்டும்.

   மற்றும்

3. தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தில் NVQ தரநிலை 5 ஐ விட குறையாத நிபுணத்துவ சான்றிதழை பெற்றிருத்தல்.

   மற்றும்

   அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / வாரியம் அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனம் ஒன்றில் தகவல் தொழிநுட்ப துறையில் (IT) குறைந்த பட்சம் பத்து வருட (10) அனுபவத்தை பெற்ற தகுதியினை கொண்டிருக்க வேண்டும்.

**1.1 உள்ளக விண்ணப்பதாரர்கள் :**

மேலே புற விண்ணப்பதாரிகளுக்கு கோரப்பட்ட தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

**2. சம்பளம்**

**சம்பள குறியீடு மற்றும் மாத சம்பள அளவு: JM 1-1 – 2025 – LKR 72,650 – 1360 x 10 –2040 x 18 = 122,970**

இருப்பினும், 2027-01-01 வரை அனைத்து ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகளுக்கான ஊதியங்கள் எம்.எஸ்.டி சுற்றறிக்கை எண். 01/2025 இன் அட்டவணை II இன் படி இருக்க வேண்டும்.

**3. வயதெல்லை :**

விண்ணப்பதாரர்கள் 22 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு அதிகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். உயர் வயதெல்லை உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு கிடையாது.

**4. உறுதிப்படுத்தல் :**

இந்த வகையின் தரம் II இல் நியமிக்கப்பட்ட ஒரு வெளிவாரி விண்ணப்பதாரர் கடமைகளை ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று வருட காலத்திற்கு தகுதிகாண் காலத்தில் செயற்பட்டுக்கொண்டு இருப்பார். தகுதிகாண் காலத்தில் அவரது செயல்திறன் மற்றும் நடத்தை திருப்திகரமாக இருந்தால், மற்றும் முதலாவது செயல்திறன் தேர்வு முடிந்ததும் அவர் தகுதிகாண் காலத்தின் முடிவில் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார். SLAB இல் ஒரு பதவியில் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்ட உள்ளக விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு வருட செயற்பாட்டு காலத்திற்கு உட்படுத்தப்படுவார்கள்.

**5. ஆட்சேர்ப்பு நடைமுறை :**

எழுத்து மூலத்தேர்வு / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வின் மூலம்

## முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பமல்லாத) - 01 வெற்றிடம்

**1. தகைமைகள்**

**1.1 வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

**கல்வித் தகைமைகள்**

1. க.பொ.த (சா/த) பரீட்சையில் முதல் இருப்பில் ஆறு பாடங்களில் சித்தியுடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் உள்ளடங்களாக நான்கு பாடங்களில் சாதாரன சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

   i. சிங்களம் / தமிழ்
   ii. ஆங்கில மொழி
   iii. கணிதம்

   மற்றும்

2. விஞ்ஞானம், கணிதம், தொழிநுட்பம் அல்லது வணிக பிரவில் க.பொ.த (உ/த) பரீட்சையில் தோற்றி ஒரு இருப்பில் மூன்று பாடங்களில் (பொதுப்பரீட்சை அல்லாமல்) சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

   மற்றும்

3. அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனமொன்றில் கணனி பொறிமுறைகள் தொடர்பிலான 06 மாத சான்றிதழ் கற்கையை நிறைவு செய்திருத்தல்.

**1.2 உள்ளக விண்ணப்பதாரர்கள்**

பின்வரும் தகுதிகளைக் கொண்ட முதன்மை நிலை-திறமை, முதன்மை நிலை-அரைதிறன் மற்றும் முதன்மை நிலை-திறமையற்ற பிரிவுகளின் பணியாளர்கள் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் ஆவர்.

**கல்வித்தகைமைகள் :**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியுடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் உள்ளடங்களாக நான்கு பாடங்களில் சாதாரன சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

i. சிங்களம் / தமிழ்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

**ஏனையவை :**

மேற்கண்ட பணியாளர் பிரிவின் கீழ் நிரந்தர பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை வழங்கியிருக்க வேண்டும்.

மற்றும்

அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றில் 06 மாதகால கணனிக் கல்வியினை கற்றதற்கான சான்றிழலினை கொண்டிருத்தல்.

**2. சம்பளம்**

**சம்பள குறியீடு மற்றும் மாத சம்பள அளவு :MA 1-2 - 2025 – LKR 46,220 - 10x540 - 7x630 - 12x1080- 12x1280 = 84,350**

2027-01-01 வரை, அனைத்து ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுக்கான ஊதியம் எம்.எஸ்.டி சுற்றறிக்கை எண் 01/2025 அட்டவணையின் இரண்டாம் கட்டத்தின்படி நடைமுறை படுத்தப்படும்.அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**3. வயதெல்லை :**

விண்ணப்பதாரர்கள் 18 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு அதிகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். உயர் வயதெல்லை உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு கிடையாது.

**4. உறுதிப்படுத்தல் :**

இந்த வகையின் தரம் III இல் நியமிக்கப்பட்ட ஒரு வெளிவாரி விண்ணப்பதாரர் கடமைகளை ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று வருட காலத்திற்கு தகுதிகாண் காலத்தில் செயற்பட்டுக்கொண்டு இருப்பார். தகுதிகாண் காலத்தில் அவரது செயல்திறன் மற்றும் நடத்தை திருப்திகரமாக இருந்தால், மற்றும் முதலாவது செயல்திறன் தேர்வு முடிந்ததும் அவர் தகுதிகாண் காலத்தின் முடிவில் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார். SLAB இல் ஒரு பதவியில் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்ட உள்ளக விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு வருட செயற்பாட்டு காலத்திற்கு உட்படுத்தப்படுவார்.

**5. ஆட்சேர்ப்பு நடைமுறை :**

எழுத்து மூலத்தேர்வு / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வின் மூலம்

**தலைவர்**

**இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை**

SELACINE MEDIA SOLUTIONS